**செய்தி வெளியீடு** **நாள்: 14.01.2026**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 21.01.2026 அன்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டுள்ள 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் திறப்பு விழா நடைபெறவுள்ளது

## மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** வருகின்ற 21.01.2026 அன்று திறக்கப்படவுள்ள சென்னை, ஏழுகிணறு, ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகிலுள்ள பழைய சிறைச்சாலை சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து இன்று (14.01.2026) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து **மாண்புமிகு அமைச்சர் அவர்கள்** தலைமையில் இராயபுரம் 5வது மண்டல அலுவலக கூட்டரங்கில் துறைமுகம் சட்டமனற் தொகுதிக்குட்பட்ட மண்ணடி, முத்தியால்பேட்டை, ஏழுகிணறு, பிராட்வே பிரகாசம் சாலை, வால்டாக்ஸ் சாலை, ஜட்காபுரம், கல்யாணபுரம், வுட்வொர்ஃப் போன்ற இடங்களில் **நீண்டநாள் சாலை ஓரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் வசிப்பவர்களுக்கு மாற்று குடியிருப்புகள் வழங்குவது** தொடர்பாக துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** தலைமையில் நடைபெறுகின்ற **திராவிட மாடல் ஆட்சியில்** "திட்டங்களைத் தீட்டுவது ஒருபுறம், தீட்டப்பட்ட திட்டங்களை விரைவாகத் தொடங்குவது மறுபுறம், அவ்வாறு தொடங்கப்பட்ட திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டு வருவது மற்றொருபுறம் என, இந்த நான்கு முனைப் பணிகளையும் ஒருங்கிணைத்து, பயனாளிகளுக்குத் திட்டங்களை உடனடியாக அர்ப்பணிக்கும் ஒரு **முதல்வர் இந்தியாவில் இருக்கிறார் என்றால், அவர் முதன்மையான முதல்வராகப் போற்றப்படும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகதான் இருக்க முடியும்.**

அந்த வகையில், ஏழுகிணறு, ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகிலுள்ள பழைய சிறைச்சாலை சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் 776 குடியிருப்புகள், சாலை ஓரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் வசிக்கின்ற மக்களுக்கு மாத வாடகை அடிப்படையில் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க இருக்கின்றார்கள். 'குச்சி வீட்டிலிருந்து மச்சி வீட்டுக்கு வந்தார்' என்ற பழமொழி இந்தக் கட்டிடத்திற்கு மிகச்சரியாகப் பொருந்தும். வரும் 21–

Verified @ RealEstate TM

ஆம் தேதி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** நேரடியாக வருகை தந்து, இந்தத் திட்டத்தைத் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு வீட்டு ஒதுக்கீடு ஆணை வழங்கி அவர்களைக் குடியேற்ற உள்ளார். **இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு.**

தனியார் கட்டுமானத்திற்கு நிகராக இதில் அமுதம் அங்காடி, இருபாலினருக்கும் தனித்தனி உடற்பயிற்சிக் கூடங்கள், அங்கன்வாடி, முதல்வர் படைப்பகம், நூலகம், மற்றும் விளையாட்டு வசதிகளுடன் கூடிய விளையாட்டு அரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 200-க்கும் மேற்பட்ட நபர்கள் பங்கேற்கும் வகையில் சமூக நிகழ்வுகளுக்கான மேடை, கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு வகுப்புகள் (Motivation Classes) நடத்துவதற்கான திறந்தவெளி அரங்கம் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் அரசு சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகளில் இது முதன்மையானதாக விளங்குவதால், இதற்கு முதல்வர் பெயரைச் சூட்ட முயற்சி மேற்கொண்டு வருகிறோம்."

**இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது, சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, சென்னை குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மின்சார வாரிய தலைமைப் பொறியாளர் திரு.எஸ்.பழனிவேலன், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் திரு.டி.ஆர்.ராஜன்பாபு மற்றும் துறைச் சார்ந்த அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™